21st January 1965]

அளித்த பதிலையொட்டி தற்போது அவ்விசாரணை முடிந்து விட்டதா? முடிவு என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Charges have been framed against the accused officials and action is being taken in accordance with the rules for diciplinary proceedings.

தேசீய உபகாரச் சம்பளத்திட்டம்

* 40. கேள்வி—திரு. மு. கருணாநிதி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) 1964-65ம் ஆண்டில் தேசீய உபகாரச் சம்பளத்திட்டத்தின் கீழ் உபகாரச் சம்பளம் வழங்கப்படுவதற்காகத் தமிழக அரசாங்கம் எத்தனை மாணவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது?

(இ) இவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் பட்டனர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Under the National Sholarship Scheme, the students are selected by the Government of India against the quota of scholarships allotted to the State from the Merit lists furnished by the various examining bodies. The number of students selected for the year 1964-65 is as follows :

From the results of the S.S.L.C. Examination held in March 1964	130
From the results of the Matric Examination held in March 1964	3
From the results of the Pre-University course held in April 1964	15
From the results of the Degree Examination held in April 1964	32
Total ...	180

(b) The students are selected on the basis of marks obtained in the examinations.

புகார் விசாரணை நிலையங்கள்

* 41. கேள்வி—திரு. மு. கருணாநிதி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:

நிர்வாகத் துறையில் ஏற்படும் கால தாமதத்தைப் போக்க அரசாங்க அலுவலகங்களில் "புகார் விசாரணை நிலையங்களை" நிறுவ அரசு உத்தேசித்துள்ளதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes. It has been decided to constitute Complaints Cells in the Secretariat, Board of Revenue, and Offices of the Heads of Departments, including Collectors and District Heads. The cells have started functioning.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், இந்தப் புகார் குழுக்களின் அலுவல்கள் என்னென்ன, கடமைகள் என்னென்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பொதுவாக மக்கள் குறைகள், கோரிக்கைகள் தெரிவித்தால் உடனடியாகக் கவனிக்க வேண்டும். தவிர்க்க முடியாத தாமதங்கள் ஏற்படுகின்றன என்ருலும் அவற்றைக் கவனிக்க என்று ஒரு தனி அதிகாரி இப்பொழுது செக்ரடேரியட்டில், போர்ட் ஆஃப் ரெவின்யூவில் அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிருர்—அவர்கள் கவனித்தால் அவைகள் சீக்கிரம் கவனிக்கப்படும். அதே போல கலெக்டர் காரியாலயங்களிலும், இதற்கென்று தனி அதிகாரி நியமிக்கப்படாவிட்டாலும், இருக்கிற அதிகாரிகளில் ஒருவர் இவற்றில் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தி, மக்களுடைய குறைகளைக் கவனிக்க வேண்டும் என்று தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுதான் நோக்கம்.

திரு. கே. ஏ. மதியழகன்: கலெக்டர் அலுவலகங்களிலே இப்பொழுது நியமிக்கப் பட்டிருக்கிற அதிகாரிகள் அவர் கீழேயே வேலை செய்யும் அதிகாரியாக இருப்பதால், இந்தப் புகார்களை அவர்கள் விசாரிப்பதால் தக்க பலன் ஏற்படும் என்று சர்க்கார் கருதுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கலெக்டர்தான் இதற்கெல்லாம் பொறுப்பு. ஆகையினுல் அவர் பார்த்து, தகுந்த அதிகாரியை நியமிக்கப் போகிருர். இதற்கென்று ஒரு தனி அதிகாரியைப் போட்டு அதனுல் அதிகமான செலவுக்கு இடம் வைக்க வேண்டாம் என்பதுதான் கருத்து. கலெக்டருக்கே பொறுப்பு இருப்பதால் வேண்டியதை அவரே செய்யக்கூடும் என்று சர்க்கார் நம்புகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், செக்ரடேரியட்டில் இருக்கக் கூடிய ஒவ்வொரு இலாகாவிற்கும் தனித்தனியாகக் குழுக்கள் இருக்கின்றனவா அல்லது செக்ரடேரியட்டில் உள்ள அத்தனை இலாகாக்களுக்கும் சேர்ந்து ஒரு குழுவா என்று தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எல்லா இலாகாக்களுக்கும் சேர்த்துத்தான் ஒரு அதிகாரி என்று போடப்பட்டிருக்கிறது.

சர்க்கரை ஆலைகள்

*42. கேள்வி—புலவர். கா. கோவிந்தன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) தமிழகத்தில் இடம் பெற்றிருக்கும் சர்க்கரை ஆலைகள் எத்தனை?

(இ) அவற்றில் ஆண்டொன்றிற்குச் சராசரி எவ்வளவு சர்க்கரை உற்பத்தி ஆகிறது?